**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**D.V.C.No.09/2021**

**வழக்கு சாட்சி PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **பஞ்சவர்ணம்** | தொழில் | :------ |
| தகப்பனார் பெயர் | : ராமசாமி | கணவர் பெயர் | : ----- |
| கிராமம் | : பண்ணைக்காடு | இனம் | : பெண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 38/2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 23.06.2025 |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இந்த D.V.C வழக்கானது ஜீவனாம்சம் மற்றும் இதர பரிகாரங்களுடன் எனது கணவருடன் சேர்த்து வைக்ககோரி இந்த மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது கணவருடன் சேர்த்து வைக்கச்சொல்லி பரிகாரம் கோரவில்லை .. என்னிடம் காட்டப்படும் படிவம் 1 பாதுகாப்பு அதிகாரியின் மனுவில் 5ம் பக்கத்தில் கணவருடன் சேர்ந்து வாழக்கேட்டல் என்ற பரிகாரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் . இந்த மனு தாக்கல் செய்தபிறகு எதிர்மனுதாரருடன் நான் சேர்ந்து வாழவில்லை என்றால் சரிதான். முறையாக காரமின்றி கணவரிடமிருந்து பிரிந்து வாழ்ந்தால் ஜீவனாம்சம் கோர இயலாது என்பதை தெரிந்து கொண்டதால் நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் 12 வது பத்தியில் எதிர்மனுதாரர் என்னையும், என் குழந்தையும் கொண்று விடுவார் என்ற சங்கதியை எந்தவித அடிப்படை ஆதாரம் இல்லாமல் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல . எனக்கும், எதிர்மனுதாரருக்கும் 2016 ல் திருமணம் நடந்தது என்றால் சரிதான் . திருமணம் முடிந்து 1ம் எதிர்மனுதாரர் வீட்டில் மொத்தத்தில் நான்கு மாதங்கள்தான் தங்கினேன் என்றால் சரிதான் . எனது அக்கா எனக்கு செலவுக்கு கொடுத்து அதனடிப்படையில் எனது வாழ்வாதாரத்தை நடத்தி வருகிறேன் . எனது அக்கா வழக்கறிஞர் அலுவலகத்தில் பணிசெய்து வருகிறார் . எனது அக்காவிற்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்றால் தெரியாது . என்னை நானே பார்த்துக்கொள்ள எனக்கு தகுதி உள்ளது என்றாலும் , ஜீவனாம்சம் பெறவேண்டி எனது அக்கா என்னை பார்த்துக்கொள்ளவதாக வழக்கிற்காக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . நான்

ஜீவனாம்சம் கோரி இடைக்கால மனு செய்து உத்தரவு பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பிரதான மனுவிலும் இடைக்கால ஜீவனாம்ச மனுவிலும் எனது அக்கா வழங்கும் தொகையில் வாழ்வாதாரத்தை நடத்தி வருவதாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. இடைக்கால ஜீவனாம்ச மனுவில் கொரோனா காலகட்டம் என்பதால் கூலி வேலைக்குக்கூட செல்லமுடியவில்லை என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் வசித்து வரும் பகுதி கிராமம் என்றால் சரிதான். எங்கள் பகுதியில் கூலி வேலைக்கு சென்றால் தினக்கூலியாக ரூபாய்.300/– கிடைக்கும். எனக்கு சொந்த வீடு உள்ளதா என்றால் உள்ளது, ஆனால் தற்போது வாடகை வீட்டில் வசித்து வருகிறேன் . குழந்தையை எதிர்மனுதாரர் தூக்கிசென்றதால்தான் இடைக்கால ஜீவனாம்ச மனு மற்றும் D.V.C. வழக்கு செய்தேன் என்றால் சரிதான். என் குழந்தை எதிர்மனுதாரருடன் கொண்டுசென்று (கூட்டிச்சென்று) 5 வருடங்கள் ஆகிறது . எதிர்மனுதாரர் சங்ககிரி சார்பு நீதிமன்றத்தில் என்னை அவருடன் சேர்ந்து வாழச்சொல்லி H.M.O.P. வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான் . அந்த மனுவில் சேர்ந்து வாழச்சொல்லி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான் , ஆனால் அந்த வழக்கில் நான் தோன்றாதரப்பினர். எதிர்மனுதாரர் நான் சொன்னதுபோன்று என்னை கொடுமைக்கு உள்ளாக்கியிருந்தால் சங்ககிரி நீதிமன்றத்தில் தோன்றி வாதிட்டுருப்பேன் என்றாலும் எதிர்மனுதாரர் என்னை எந்தவிதத்திலும் கொடுமை செய்யாததால்தான் அந்த வழக்கில் தோன்றவில்லை என்றால் சரியல்ல. திண்டுக்கல் மாவட்ட Child Welfare Committe–யில் எனது குழந்தையை மீட்டுத்தரச்சொல்லி மனு செய்தேன் என்றால் சரிதான் . அதன்பேரில் அங்கு விசாரணைக்காக எனது குழந்தையை வரவழைத்தார்கள் என்றால் சரிதான். அங்கு நடந்த விசாரணையில் எனது குழந்தை என்னுடன் வரமாட்டேன் என்று தெரிவித்ததால் , எதிர்மனுதாரருடன் அனுப்பி வைத்தார்கள் என்றால் சரியல்ல , என்னை குழந்தையை பார்க்கவோ , பேசவோ அனுமதிக்கவில்லை. திண்டுக்கல் மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் G.W.O.P.No.129/2021 என்ற மனுவினை நான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான் . அந்த மனுவில் முழுவிசாரணை நடந்தது என்றால் சரிதான் . அந்த மனுவின் விசாரணையின்போது மாவட்ட நீதிபதி என் குழந்தையை அழைத்து விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான் . அந்த மனுவின் விசாரணையில் எனது மனுவை தள்ளுபடி செய்து எனது குழந்தையை எதிர்மனுதாரரின் பொறுப்பில் அனுப்பி வைத்தார்கள் என்றால் சரிதான் . அந்த G.W.O.P.No.129/2021 –ன் உத்தரவில் என் குழந்தையை நான் எப்போது வேண்டுமானாலும் பார்க்கலாம் , பேசலாம் என

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் . அந்த உத்தரவிற்கு பிறகு நான் எனது குழந்தையை பார்க்க முயற்சி மேற்கொண்டேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் வேறு வேலைக்கு செல்லாமல் குழந்தையை பராமரிக்கவேண்டி குழந்தையை பராமரித்து வருகிறார் என்றால் சரியல்ல . என் குழந்தையை எதிர்மனுதாரர் C.B.S.E பள்ளியில் படிக்கவைத்து நிறைய பொருட்செலவுகள் செய்து வருகிறார் என்றால் படிப்பதாக சொன்னார்கள் . தாய், தந்தையர் இருவரும் பிரிந்து வழக்கு நடத்தி வந்தால் குழந்தையின் எதிர்காலம் பாதிப்புக்குள்ளாகும் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் என்னை கொடுமைப்படுத்தவில்லையென்றாலும் ஏதோ ஒரு காரணத்திற்காக வாழ மறுக்கிறேன் என்றால் சரியல்ல . என் வாழ்வாதாரத்தை பார்த்துக்கொள்ள எனக்கு போதிய வருமானம் உள்ளது என்றாலும் எனக்கு எதிர்மனுதாரர் ஜீவனாம்சம் தர கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல . நான் போதிய காரணமின்றி எதிர்மனுதாரருடன் வாழ மறுக்கிறேன் என்றால் சரியல்ல . என் மனு தள்ளளுப்படிக்கு உள்ளாகியிருக்கானா என்றால் சரியல்ல.

Taken down by me in open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2025.06.23 17:59:02 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.